இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் -2023/2024

மட்டம் - 05

**LLU5709–** நிர்வாகச் சட்டம்

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை - I

காலம் : ஒரு (01) மணித்தியாலம்

திகதி : 05.11.2024 நேரம்: பி.ப.01.30 - பி.ப.02.30

ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் விடை அளிக்குக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. 2020ஆம் ஆண்டின் நகர திட்டமிடல் சட்டம் ஆனது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பிற்கான அமைச்சருக்கு வெள்ளம், நிலச்சரிவுகள், சுனாமி முதலான காலநிலை மாற்றத்தின் தாக்கங்களிற்கான திட்டங்கள், கழிவு நீர் முகாமைத்துவம் மற்றும் வலுச்சக்தித் திறன் என்பனவற்றின் உபாயங்களை (Strategies) உள்ளடக்கி நிலைப்பேண்தகு நகர அபிவிருத்தி நடவடிக்கைகள் மீது வழிகாட்டல்களை (Directives) வழங்க அதிகாரம் அளித்துள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 25 ஆனது சகல தாக்கங்களிற்குமான குறித்துரைக்கப்பட்ட உபாயங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக விசாரிக்க ஒரு ஆணைக்குழுவை அமைச்சர் நியமிக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. பிரிவு 25 மேலும் குறிப்பிடுவதாவது இக்குறிப்பிட்ட ஆணைக்குழுவானது அமைச்சரால் வழங்கப்படுவதற்கான ஏதேனும் வழிக்காட்டியை தாக்கங்களை எடுத்துரைத்து ஒரு தாக்க மதிப்பீட்டு அறிக்கையை தயார் செய்யும் போது உள்ளுர் சபைகளையும், சகல பிற பங்குதாரர்களையும் ஆலோசிக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. இக்குழுவானது இத்தகு வழிகாட்டிகள் வழங்கப்படுவதற்கு ஒரு மாத காலத்திற்கு முன்னர் அமைச்சருக்கு அறிக்கையானது முன்வைக்கப்பட வேண்டுமென தேவைப்படுத்துகிறது.

   (அ) புதிய சுற்றாடலுக்கு இயைபான கட்டுமாண தராதரங்களை பூர்த்தி செய்யாத 2018ஆம் ஆண்டிற்கு பின்னர் கட்டப்பட்ட ஏதேனும் கட்டிடங்களை உள்ளுர் சபைகள் தகர்த்து நீக்கவேண்டுமென ஒரு வழிகாட்டியை அமைச்சர் விநியோகித்துள்ளார்.

   (ஆ) இவ் ஆணைக்குழுவானது அமைச்சருக்கு அறிக்கை அனுப்புவதற்கு ஒரு வார காலத்திற்கு முன்னரே ஒரு பகிரங்க கலந்தாலோசனைக்காக உள்ளுர் சபையையும் அப்பிரதேச வாசிகளையும் மாத்திரம் வரவேற்றிருந்தது.

ஒரு பிரசித்தமான உடைமை நிர்மாணிப்பாளரான ரந்திப் என்பவர் 2020 இல் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நடைபெற்றுக்கொண்டுள்ள தனது உடைமை அபிவிருத்திகளில்

இவ்வழிகாட்டி மிகப்பெரும் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என வாதிடுகிறார். இவர் மேற்குறிப்பிட்ட வழிக்காட்டியை தான் கேள்விக்குட்படுத்த முடியுமா என அறிய விரும்புகிறார்.

ரந்திப் மேற்குறிப்பிட்ட வழிகாட்டியை எவ் அடிப்படைகளில் கேள்விக்குட்படுத்தலாம் என அறிவுறுத்துக. நிர்வாகச் சட்டக் கோட்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் என்பனவற்றால் உமது விடையை ஆதாரப்படுத்துக.

**(20** புள்ளிகள்)

2. "வலுவிகழ்தல் எனும் கோட்பாடானது பாராளுமன்ற இறையாண்மை எனும் கருத்தேற்பிற்கு மதிப்பளிப்பதுடன், சட்டவாட்சியை நிலைநிறுத்துவதற்கான நீதிமன்றங்களின் அரசியலமைப்பு சார் பொறுப்புடைமையில் தங்கியும் உள்ளது."

Murray, Philip, On the Doctrinal Foundations of Administrative Law (March 3. 2024). University of Cambridge Faculty of Law Research Paper No. 7/2024. Available at SSRN: http://ssrn.com/abstrct =4746539 or http://dx.doi.org/10.2139/ssrn.4746539

மேலே உள்ள கூற்றை நீதியியல் மீளாய்வின் அரசியலமைப்பு சார் அடிப்படைகள் மீது குறித்து நோக்கி நுணுக்கமாக ஆராய்க.

**(20** புள்ளிகள்)

- பதிப்புரிமை பெற்றது -